டாண்டுகள் ஆகியும், இதுவரையும் நடவடிக்கை எடுத்ததாக நான் அறியவில்லை. இதற்கு உடனடியாக இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி வந்ததற்கு முன்னாலே, 89-க்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகள். அது தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் இருக்குமா என சந்தேகப்பட்டுத்தான் Zonal Officer-ஐ விட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கல்லுப்பட்டி பேரையூர் சாலை

*2072—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி-பேரையூர் நெடுஞ் சாலையை அகலப்படுத்தவும், செப்பனிடவும் அரசு நடவடிக் கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

அரசின் நிதி நெருக்கடியால் அண்மையில் எடுத்துச் செய்யும் வாய்ப்பில்லை.

சேலம் பேரூர் பாதையை அகலப்படுத்துதல்.

*3253—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாக பேரூர் செல்லும் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாகப் பேரூர் செல்லும் பாதை குறுகிய பாதையாக இருப்பதால், இப்பொழுது வாகன வசதிகள் பெருகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வந்து அந்தப் பாதையை அகலப்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.